RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22471

OPEN ACCESS

# திருவள்ளுவர் பார்வையில் கயமை

சு. செல்வகுமாரன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, மாநிலக்கல்லூரி, சேப்பாக்கம், சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா

# Baseness in Thiruvalluvar's vision

S. Selvakumaran [a, *]

[a] Department of Tamil, Presidency College, (Autonomous) Chepauk, Chennai - 600005, Tamil Nadu, India

* Corresponding Author: mugadu.kumaran@gmail.com

Received: 18-07-2022
Revised: 10-09-2022
Accepted: 26-09-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Man observes everything while participating in the social movement in which he lives. Good works appear when he begins to express what he has observed aesthetically and virtuously. Thirukkural is a great work that has appeared in this way. Thiruvalluvar has given 1330 Thirukkural to the world through 133 chapters. He was the one who conveyed great news to the people through the small steps of Thirukkural. There is nothing in Thirukkural that is not spoken. There is nothing in the world that he does not say. Thirukkural has such a distinction. That is why its creator Thiruvalluvar is called the great sage who has realized all the time. This is the way Thirukkural is to convey the trilogy.

**Keywords:** Thirukkural, Baseness, Thiruvalluvar, 1330 Thirukkural

## முன்னுரை

மனிதன் தான்வாழும் சமூக இயக்கத்தில் பங்கெடுத்தவாறே ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனித்துவருகின்றான். அவன் தான் கவனித்தவற்றை அழகியலோடும், அறத்தோடும் வெளியே சொல்லத் தோன்றுகிறபோது நல்ல படைப்புகள் தோற்றம் பெறுகின்றன. இப்படித் தோன்றிய ஒரு பெரும் படைப்பே திருக்குறளாகிறது.

திருவள்ளுவர், 133 அதிகாரங்களின் வழி 1330 திருக்குறளை இவ்வுலகிற்கு அளித்துள்ளார். அவர் திருக்குறளின் சிற்றடிகளின் மூலம் பெருஞ்செய்திகளை மக்களுக்கு வழங்கியவர். திருக்குறளில் பேசாத செய்தியென்று ஒன்று இல்லை. அவர் பேசாத ஒன்று உலகிலும் இல்லை எனலாம். அத்தகையச் சிறப்பைத் திருக்குறள் பெற்றிருக்கிறது. எனவேதான் அதனை படைத்த திருவள்ளுவரை முக்காலமும் உணர்ந்த மகாமுனி என்கின்றனர். இதன் வழி திருக்குறளும் முக்காலத்தை உணர்த்தும் தன்மையுடையது என்பதனை எளிதில் உணரலாம். திருக்குறளைப் பொறுத்தமட்டில் எல்லா அதிகாரங்களும், எல்லாக்குறளும் ஒவ்வொரு நிலையில் முக்கியமானவையே. எனினும் கட்டுரையின் நோக்கம் கருதி கயமை அதிகாரம் பற்றி மட்டும் இங்கு விவாதிக்கப்படுகிறது.

மனிதர்கள் மானுடச் செயல்பாடுகளை, மிகவும் உயர்வுடையதாகவும், இயல்பானதாகவும், கீழானதாகவுமாக வேறுபட்ட நிலைகளில் பார்க்கின்றனர். இதில் கயமைத்தனம் / கயமைக்குணம் என்பது மிகவும் இழிவானதாகப் பார்க்கப்படுகிறது. கி.ஆ.பெ. விசுவநாதம் இதுபற்றி பேசுகிறபோது,

“சான்றாண்மை என்பது உயர்ந்த தன்மையின் முடிவான எல்லையையும், கயமை என்பது இழிந்த தன்மையின் கடையான எல்லையையும் காட்டும். இதனைத் தமிழ்மக்கள் கண்ட அளவிற்குப்

பிறமக்கள் காணவில்லை" என்கிறார். அதுபோல இதே கட்டுரையில் இன்னொரு இடத்தில் அவர் குறிப்பிடுகிறபோது, "ஏறக்குறைய 4,300 சொற்களுள்ள குறளில் "கீழ்" என்ற சொல் 10 இடங்களில் மட்டுமே வருகிறது. அவற்றில் "இழிகுணம்" என்ற பொருளில் வந்த சொற்கள் நான்கே. இந்த நான்கிலும் எந்த ஒன்றையும் மக்களின் வேறு எந்தக் குணத்திற்கும் வழங்காமல், கயமைக் குணத்திற்கே வள்ளுவர் வழங்கிவிட்டது, எண்ணி எண்ணி வியக்கக் கூடியதாகும்" என்பதும், கயமைத்தனத்தின் இழிநிலையை உணர்த்துவதாக உள்ளது. ஆக, இந்த கயமைத்தனத்தை திருவள்ளுவரின் திருக்குறள் வழி இக்கட்டுரை ஆராய்கிறது.

## மனித வடிவத்தை ஒத்தவர்கள்

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன

ஒப்பாரி யாங்கண்ட தில்"

இக்குறளுக்கு விளக்கம் தரும் வ.உ.சி, கயவர்கள் வடிவத்தால் மக்களையேப் போன்றிருப்பர். அவர் போல ஒன்றுக்கொன்று ஒத்திருக்கும் இருவேறு பொருள்களை யாம் பார்த்ததில்லை என்கிறார் (Parimelalhagar, 1994). மேலும் மக்களும் கயவரும் வடிவால் முழு ஒற்றுமையும், குணத்தால் வேற்றுமையும் உள்ள இரண்டு வேறுபொருள்கள் ஆவார்கள் என்பதும், தெளிவைத் தருவதாக உள்ளது.

மக்களைப்போலெனில், இயல்பாகவே நல்ல குணங்களையுடைய இயல்பான மனிதர்களின் வடிவத்தை ஒத்தே, கயவர்கள் இருப்பார்கள் என்பதும் இங்கு குறிப்பாகிறது. உறுப்பொத்து குணம் ஒவ்வாமையால் கயவர் மக்கள் இல்லாது ஆயினார் என்கிறார் மணக்குடவர். குணத்தில் ஒருவர் கயவராக இருப்பார். ஆனால் நல்லவரைப் போலக் காட்டிக் கொள்வார். மனிதர்களிடம் மட்டும்தான் இப்படி இருவகையான நிலைகளை ஒரே உருவத்தில் காணமுடியும் எனும் கலைஞரின் உரையும் இங்கு சிந்தனைக்குரியதாகின்றது. பரிமேலழகர், கயவரது குற்றமிகுதி கூறப்பட்டது என்கிறார். தமிழ்க்குழவி, மக்கள்போல் தானிருப்பர் கயவர். ஆனால் மனக்குகையில் பேரிருளே நிரம்பி நிற்கும் என்றும் அடையாளப்படுத்துகிறார்.

## யாருக்காகவும் கவலைப்படாதவர்கள்

"நன்றறி வாரிர் கயவர் திருவுடையர்

நெஞ்சத்து அவலம் இலர்"

நன்மை செய்யும் மக்களினும் கயவர் மேம்பாடுடையவர். எனும் வ.உ.சி, கயவர்கள் மனதளவில் பிறருக்கு நன்மை செய்ய வேண்டுமே என்ற கவலையில்லாதவர்கள். குறிப்பாக யாருக்கும் நன்மை புரிய விரும்பாதவர் என்கிறார் (Parimelalhagar, 1994).

நன்மையறிவாரினும் கயவர் திருவுடையர், இம்மை மறுமைக்கு உறுதியாயின செய்யப் பெறுகிலோம் என்னும் கவற்சி நெஞ்சின்கண் உறுதல் இல்லாதவன் என்கிறார் மணக்குடவர் (Ponnusamy Nattar, 1925).

இங்கு, சான்றாண்மை குணத்தை உடைய, அறத்தைப் பேணுகின்ற மனிதர்கள் தம்மால் பிறருக்கு நன்மை நிகழாவிடினும் தீமை நிகழ்ந்து விடக்கூடாது என்று கவலையுறுவார்கள். நல்லவர்களிடம் எல்லா நிலையிலும் கவலை பின்தொடர்கிறது. ஆனால் கயவர்களை எந்த நிலையிலும் கவலைத் தொட்டுப் பார்ப்பதில்லை என்ற நிலையில் வைத்து வள்ளுவர் இவர்களை மேம்பாடுடையவராகக் கருதுகிறார் போலும். கயவர்கள் யாருக்காகவும் கவலைப் படாதவர்கள் என்பதால் அவர்களிடம் மனிதர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே திருவள்ளுவர் உணர்த்துவதாகிறது.

ஆக மக்கள் நலன் பேணி எழுதப்பட்ட திருக்குறளைப் பற்றிக் குறிப்பிடும் ஆ.ச. அண்ணாமலை முதலியார்,

“ஒன்றே தெய்வம் ஒன்றே தனிவழி

இன்றே தெளிந்து இன்புற்று இருக்க

இன்பத் தமிழில் எங்கள் வள்ளுவன்

இன்பப் பேறு இரும்புவி பெற்றிட

அறம் பொருள் இன்பம் அடங்கிய ஒரு நூல்

திறனுடன் செப்பிய தெய்வத் திருநூல்”

என்று பாராட்டுவது குறிப்பிடத்தக்கதாகிறது. (Parimelalhagar, 1994)

கலைஞர், முத்தாய்ப்பாக எப்போதும் நல்லவை பற்றியே சிந்தித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்களைவிட, எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருக்கும் கயவர்கள் ஒரு வகையில் பாக்கியசாலிகள்தான் என்கிறார். சாலமன் பாப்பையா, சிவயோகி சிவக்குமார் போன்ற புதிய உரைக்காரர்களும் இக்கருத்தோடு ஒத்த தன்மைக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது.

## தாம் விரும்புவனயாவும் செய்யக் கூடியவர்

“தேவர் அனையர் கயவர் அவருந்தாம்

மேவன செய்தொழுக லான்”

கயவர் தேவரை ஒப்பர் (Parimelalhagar, 1994). ஏனெனில் கயவர்கள் தேவர்போல தாம் விரும்புவனவற்றைச் செய்து ஒழுகுதலால் என்கிறார் வ.உ.சி. மேலும் கயவரை வள்ளுவர் உயர்த்திக்கூறுதல் போல தாழ்த்திக் கூறினார் எனவும் குறிப்பிடுகிறார். பதிப்பாசியர் தரும் குறிப்பினில், மேவன - விரும்புவன என்பதற்கு, உயர்ச்சியும் இழிவுமாகியக் காரண வேறுபாடு குறிப்பால் தோன்றி நிற்பதால் இது புகழ்வது போன்று பழித்தவாறாயிற்று என்கிறார் (Krishnamoorthi, 1993).

பரிமேலழகர் தேவரனையர் என்பதற்கு தேவரைப் போன்று தம்மை யாரும் நியமிப்பாரின்றி தாம் விரும்புவனவற்றைச் செய்யக்கூடியவர் என்று தரும் விளக்கமும் முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்தக் குறளுக்கும், முந்தையக் குறளைப்போல நேரடியாக அர்த்தம் கொள்வதே சரியானதாக இருக்கும். தேவரை ஒத்தவர் என்பதன் மூலம் அவர்களை தனிமைப்படுத்திக் காட்டுவதே வள்ளுவரின் நோக்கமாக இருக்கமுடியுமேத் தவிர உயயர்வுபடுத்திக் காட்டுவதில்லை. ஆக சான்றாண்மை குணமுடைய மக்கள் கயவர்களிடம் கவனமாக இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தவே வள்ளுவர் இந்தக்குறளை இந்த நிலையில் அமைத்திருக்கிறார் என்பதாகக் கொள்வதே சரியாக இருக்கும்.

மணக்குடவரும், கயவர் தாம் வேண்டியன செய்வார் என்பதாகக் குறிப்பிடுகிறார். ஆக, மனிதனை வழிநடத்தும் பெரும் பணியைத் திருக்குறள் செய்வதை மேற்காணும் குறள்கள் நமக்கு உணர்த்துகின்றன. திருக்குறளின் சிறப்பினைப் பற்றிக் குறிப்பிடும் இரா. இளங்குமாரன்,

“அன்பு, இல்லறம், வாழ்வியற் பயிற்சியின் தொடக்கமும் வளர்ச்சியுமாம் நிலை, அருள், துறவு நிலை, குடிநலன் காத்து, அதன் மேல் குமுகாய நலனாகவும், முழுதுலகு நலனாகவும், உயிரிகள் அனைத்தும் உய்யும் ஒரு பெருநெறியாகவும் உள்ள நிறைநிலை உடையது” என்பது கட்டுரைக்கு வலுசேர்ப்பதாக அமைகின்றது (Ilankumaranan, 2000).

## தம்மை மேம்பட்டவராய் காட்டிக் கொள்வர்

**"அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்**

**மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்"**

பரிமேலழகர், தன்னிலும் சுருங்கியப் பட்டியாய் ஒழுகுவாரைக் கயவர் கண்டானாயின், அவ் ஒழுக்கத்தின்கண் அவரின் தான் மேம்பாட்டவன் என்பதாகக் காட்டி இறுமாந்து கொள்வான் என்கிறார் (Parimelalhagar, 1994).

அதாவது இயல்பான மனிதர்களைப் பார்த்தால் கயவர்கள் அவரினும் தான் மேம்பட்டவராக பெரியவர்கள் போல காட்டிக்கொள்வர் என்பது கருத்தாகிறது. இயல்பு - மனிதர்களுக்கான குணத்தைக் குறிக்கிறது. கயவர்கள் இயல்புக்கு மாறான குணமுடையவர்கள். மனிதர் என்று சொல்லத்தக்க குணத்துக்கு மாறானவர். ஆக இயல்பான மனிதகுணத்தை உடையவர்கள் / நல்ல நடத்தை உடையவர்கள் கயமைத்தனம் உடையவர்களையும் மதித்து நடப்பர். அப்படி மதிப்பவர்களை கயவர்கள் தமக்குக் கீழ்ப்பட்டவராய் கருதி நடந்து கொள்வர்.

தமிழ்க்குழவி, கயவர்கள் தம்மை மேலாண்மை மிக்கோராய் எண்ணிக் கொண்டு தகவுடையார் முன்நின்று தருக்கிக் கொள்வார். தரம் கண்டு பேசுகிறத் தன்மை இன்றி அகம் நோக அறவோரின் அன்பை, பண்பை அறியாமையால் பழிப்பர். அழிவை எண்ணார். கீழானச் செயல்களால் விரைவில் அழிந்து போவார் என்ற குறிப்பைத் தருகின்றார்.

மு.வ, கீழ்மக்கள் தமக்குக் கீழ்பட்டவராய் நடப்பவரைக் கண்டால் அவரைவிடத் தாம் மேம்பாடு உடையவராய் இறுமாப்படைவர் என்கிறார் (Manimaran, 2017).

இதற்கு மணக்குடவர் தரும் விளக்கம் சற்றே வேறுபட்டதாக அமைகிறது. அதாவது, மனையகத்திலிருந்து பொற்புடையராகிய பெண்டிரைக்காணின் அவரினும் மிகப் பொற்புடையராய் அதனைப் பெற்றோமென்று கயவர் இறுமாப்பர் என்கிறார்.

## கயவர்க்கு ஆசாரம் உண்டென்பது பொய்யாகும்

**"அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்**

**அவாவுண்டேல் உண்டாம் சிறிது"**

கயவர்கள் அச்சத்தாலேயே சிலநேரங்களில் ஓரளவு ஒழுக்கமுடையவராய் விளங்குவர் (Parimelalhagar, 1994). மற்றபடியெனில் தாங்கள் விரும்புவது கிடைக்கும் என்ற நிலை ஏற்படினும் ஒழுக்கமுடையவர்களாகக் காட்டிக்கொள்வர். இதனை,

வ.உ.சி, கயவர்க்கு ஆசாரம் இயல்பு அல்ல என்றும், உண்டாம் எனின் அது பொய் என்றும் சுட்டுகிறார். மணக்குடவரும் இதனை இஃது இயல்பான ஒழுக்கம் இல்லை என்பதாகச் சுட்டுகிறார் (Chidambaram Pillai, 2013).

தேவநேயப் பாவாணர், கீழ் மக்களின் ஒழுக்கம் பெரும்பாலும் அச்சமும் சிறுபான்மை தன்னலமும், பற்றுமின்றி இயல்பாக ஏற்படாது என்கிறார் (Devaneya Pavanar, 1969).

வ. சுப. மாணிக்கம் திருவள்ளுவர் பேசியுள்ள பலநிலையறம் பற்றி சுட்டுகிறபோது,

"அழுக்காற்றினனும் பண்பிலானும் கல்லாதவனும் பேதையும் பெருஞ்செல்வர்களாக, அழுக்காற்றிலாரும் கற்றாரும் இற்பிறந்தாரும் நற்பொருள் செல்வாரும் வறியவராகக் கண்டார். தமர் பசிக்க ஏதிலார் ஆர்த்தும் பேதைமையும், எச்சிற்கை உதறாக் கயமையும்" என்பதாக கயமையைச் சுட்டுவது கவனத்திற்குரியதாகும்.

## தம் செயலால் கறைபட்ட நெஞ்சினராய் சுட்டத்தக்கவர்

"அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட

மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்"

இக்குறளுக்கு விளக்கம்தரும் மணக்குடவர், கயவர் அறையும் பறை போல்வர். தாம் கேட்ட மறைகளைப் பிறருக்குக் கொண்டு சென்று அறிவித்தலான் இது அடக்கமிலரென்றது என்கிறார் (Parimelalhagar, 1994).

கயவர்கள் தாம் கேட்டு பிறருக்கு பகிரப்படாமல் மறைக்கப்பட வேண்டியச் செய்திகளை தன் அடக்கமில்லாமல் உடனடியாக பிறருக்கு அறிவித்தலால் அறையப்படும் பறை எனும் கருவிக்கு ஒப்பாகப் பார்க்கப்படுவர்.

தமிழ்க்குழவி இதற்கு மிக எளிதானதொரு விளக்கத்தைத் தருகிறார். பிறரறியக் கூடாத செய்தி ஒன்றை பெரும் நம்பிக்கைக் கொண்டு ஒருவர் சொல்ல, குறைபெருக்கி நிறைசுருக்க குதூகலித்துக் கூடியுள்ள அவையோர்பால் ஆர்வத்தோடு பறையறிவித்தால் போல பகர்வார் தம்மின் பான்மைதனை எவ்வாறு மொழிவதீண்டு கறைநெஞ்சால் அவரேதான் கயவர் ஆவார் என்கிறார்.

திருக்குறளை வாசிக்கிறபோது திருவள்ளுவர் உயிர் ஓம்புதலைத் தன் கொள்கையாகக் கொண்டவர் என்பதை உணரமுடிகிறது. அதனைப் பற்றி எடுத்துரைக்கும் கடவூர் மணிமாறன்,

"உயிரோம்புதலைச் சிறந்த அறமாகக் கூறுகிறது திருக்குறள். துன்பம் எனத் தான் உணர்ந்தவற்றைப் பிறருக்குச் செய்தல் கூடாது என்பது திருக்குறள் உணர்த்தும் அறம். எச்செயல் செய்தாலும் எம்மொழி பேசினாலும் அடித்தளமான மனத்தூய்மையாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் தூயமனத்தின் வழிவரும் மொழியும் செயலும் தூயனவாக இருக்கும். வினைத்தூய்மை காப்பதற்காகத்தான் மனத்தூய்மையைப் பெரிதும் வலியுறுத்துகிறது திருக்குறள்" என்பது திருக்குறளின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வகை செய்கிறது.

## ஈகைக் குணம் அற்றவர்கள்

"ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்

கூன்கையர் அல்லா தவர்க்கு"

கயவர்கள் ஈகைக் குணம் அற்றவர்கள். எனவே அவர்கள் ஏழைகளுக்காக தன் எச்சிக்கையைக்கூட உதறமாட்டார்கள் (Parimelalhagar, 1994). மாறாக கையை மடக்கி செவிப்பறையைத் தாக்கும் முரடர்களுக்கு கொடுப்பர் என்பதாகிறது.

மணக்குடவர் இங்கு கயவர் இரப்பவர்க்கும் கொடார் என்கிறார். "கெடிறுடைக்கும்" என்பதற்கு கலைஞர் கன்னத்தில் குத்து விடுகின்றவர்களுக்கு என்றும், வ.உ.சி பிடரியை உடைப்பவர்களுக்கு என்றும் விளக்கம் தருகின்றனர். பொதுவாகவே நமது கிராமப்புறங்களில் ஒருவன் தவறு செய்தால் உடனடியாக அவனைச்சுட்டி "அவனுக்கு செவுள்ல ஒண்ணு குடு" என்பதும், "அவன் கன்னா மண்டையப் பிளக்கணும்" என்பதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கதாகிறது.

தமிழ்க்குழவி உண்டதன்பின் மிஞ்சுகிற எச்சில்கூட ஒருவர்க்குப் பயன்படுதல் கூடாதென்ற எண்ணமுள்ள மாந்தர்கள் இங்கே உண்டு. இதயத்தே அன்பிரக்கம் எதுவும் இல்லார் என்கிறார்.

## கரும்பை போல நசுக்க பிறருக்கு உதவுபவன்

"சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்

கொல்லப் பயன்படும் கீழ்"

குறளுக்கு விளக்கம் தரும் வ.உ.சி, மேன்மக்கள் சொல்லிய அளவிலே பிறருக்குப் பயன்படுவர். ஆனால் கீழ்மக்களாகியக் கயவனோ கரும்பை ஆலையிலிட்டு நசுக்குதல் போல நசுக்கப் பயன்படுவான் என்கிறார் (Parimelalhagar, 1994).

தமிழ்க்குழுவி, இல்லாமை தனையுரைத்தல் போதும் சான்றோர் இயன்றவரை உதவிடுவர், ஆனால் கீழோர் சொல்லாரம் தொடுத்தாலும் அசைவதில்லை. சூழ்நின்று புகழ்ந்தாலும் கேட்பதில்லை. நில்லாமை தனையவர்கள் உணர வைக்க நேராயங்குதவுவது வல்லாண்மைதான். ஒல்லவே கரும்பதனைப் பிழிந்தாலன்றி ஒருவருக்கும் நற்பாகு கிடைப்பதில்லை என்கிறார். மணக்குடவர் குறிப்பிடுகையில் கயவர் ஒறுப்பார்க்கு கொடுப்பார் என்கிறார்.

## அழுக்காறுடையவர்கள்

"உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்

வடுக்காண வற்றாகும் கீழ்"

பிறர் நன்றாக உடுத்தலையும் உண்ணலையும் காணின் அவர் மீது கயவர்கள் குற்றங் கற்பிப்பர் என்கிறார் வ.உ.சி. இஃது (கயவர்) அழுக்காறுடையார் என்றக் குறிப்பைத் தருவதாகும் என்கிறார். மணக்குடவரும் இதனை அழுக்காறுடையது என்பதாகவே சுட்டுகிறார் (Parimelalhagar, 1994).

தேவநேயப்பாவணர், பிறர் தம் செல்வத்தின் பயனாக ஓவியப் பூம்பட்டாடை அணிதலையும், அறுசுவை நெய்யுண்டி உண்டலையும் கீழ்மகன் காணுமாயின் அவற்றைப் பொறாது அவரிடத்துக் குற்றமில்லாதிருக்கவும் ஒரு குற்றத்தைப் படைத்துக்கூற வல்லவனாம் என்பதும் கூர்மையானப் பார்வையுடையதாய் அமைகிறது.

"பொதுமறை" எனும் தலைப்பில் திருக்குறளைப் பற்றி பல்வேறு விசயங்களைப் பட்டியலிடும் கு. வைத்தியநாதன் இறுதியாக, "பொதுவான அறவுரைகளை மிகவும் நாகரீகமான முறையில் திருவள்ளுவர் கூறியுள்ளார்" என்று திருக்குறளை சிறப்பிக்கிறார்.

## கயவர் எவராயினும் விற்றர்குரியவர்

"எற்றிற் குரியவர் கயவரொன்று உற்றக்கால்

விற்றற்கு உரியர் விரைந்து"

தமிழ்க்குழவியார் இக்குறளுக்கு எத்தனையோ நன்னெறிகள் பயின்ற போதும் இலகுமறத் தொன்னூல்கள் அறிந்த போதும் வித்தகர்கள் துணைக்கிருந்து விதைத்தபோதும் வினைப்பயன்கள் முன்வந்து உறுத்தும் போதும் எற்றிற்கென்றிசைவரோ கயவர், பாவம் ஏதேனும் ஆதாயம் கிடைக்குமென்றால் விற்றற்காம் பொருளாவார் மனிதர் என்ற விரல் மொழியன்னாருக்குப் பொருத்தம் இல்லை என்று விளக்கம் தருகிறார் (Parimelalhagar, 1994).

பரிமேலழகர், கயவர் தம்மை யாதானும் ஒரு துன்பமுற்றக்கால் அதுவே பற்றுக் கோடாக விரைந்து தம்மைப் பிறருக்கு விற்றர்க்கு உரியவர் என்கிறார். அத்தோடு அதுவன்றா வேறு எத்தொழிலுக்கு இவர்கள் உரியவர் என்ற கேள்வியை எழுப்பி ஒரு தொழிலுக்கும் இவர்கள் உரியவரல்லர் என்பதையும் குறிப்பால் உணர்த்துகிறார். மேலும் நாம் கயவரின் கயமையை அறிந்து வேண்டா என்றற்கு முன்னே விற்று நின்றலின் விரைந்து என்று வள்ளுவர் கூறியதாகக் குறிப்பிடுகிறார்.

இங்கு கயவருக்கு ஓரிடத்தில் ஏதேனும் ஒரு சூழலில் துன்பம் நேரிடுமாயின் அவன் அதிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கு எதையும் செய்யத்தயங்கமாட்டான். எதிரில் நிற்பவர் யாராயினும், அவரை நம்பி நிற்பவராயினும் அவர்களையும் விற்றுக் கொண்டு அங்கிருந்து தன்னைக் காத்துக் கிளம்பி விடுவான் என்பதே சரியானதாக இருக்கும். அவனிடத்தில் பார்த்துப் பழகு

அவன் தேவைப்பட்டால் உன்னையே வித்துப்போடுவான் என்னும் கிராமத்து மொழி பொருத்தப்பாடு உடையதாகிறது. மணக்குடவர் கயவரைப் பார்த்து அவர்கள் எதையும் செய்வர் என்பதால் நிலையிலர் என்கிறார்.

## முடிவுரை

மானுட மேம்பாடு சார்ந்த வேறுபட்ட பலக் கருத்துக்களை ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து பத்து திருக்குறளில் பதிவு செய்யும் திருவள்ளுவர், கயமை அதிகாரத்திலும் கயமைத்தனத்தின் முக்கியமான பத்து அம்சங்களை பத்துக்குறளிலும் பதிவுசெய்துள்ளார். இப்பதிவு கயவர்களை நமக்கு அடையாளப் படுத்திக் காட்டுவதன் மூலம் சாதாரண மனிதர்கள் கயவர்களிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்ளவுமான ஒரு அறிவுறுத்தல் சார்ந்த அதிகாரமாக அமைத்துள்ளார்.

## References


Chidambaram Pillai, V.O. (2013) Thirukural, VOC library, Chennai, India

Devaneya Pavanar, (1969) Thirukural Marabu Murai, Nesamani Pathipagam, Chennai, India

Ilankumaranar, R. (2000) Valluvamum Valviyalum, Thiruvalluvar Thavasalai Veliyedu, Trichy, India

Krishnamoorthi, S. (1993) Thirukural Palaya Urai, Tamil Nadu archaeology department, Chennai, India

Manimaran, (2017) Thirukural Unarthum Aramum Arasiyalum, Vediyal Veliyetagam, Kulithalai, India

Parimelalhagar, (1994) Thirukural, Palaniyappa Brothers, Chennai, India

Ponnusamy Nattar, K. (1925) Thirukural Moolamum Manakudaivar uraiyum, Nobel Achagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License